# அம்பத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

O.S.No.387/2012 RCOP.No.

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திரு.R.இளங்கோ என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் ஆண்டின் 10வது சட்டத்தில் வகை முறைகளுக்கு உட்பட்டு 2023 ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 08-ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

வா.சா. 2 08.08.2023

| | |
|---|---|
| பெயர் - கௌரிசங்கர் | தந்தை/கணவர் பெயர் - நடராஜன் |
| தொழில் | வயது |
| இனம் | சமயம் |
| கிராமம் | வட்டம் |

<u>குறுக்கு விசாரணை</u> :-

1. எனது தந்தை பெயர் என்னவென்றால் கே.எஸ்.நடராஜன் ஆகும். 2ம் வாதி வசந்தா எனது தாயார் என்றால் சரிதான். 1ம் வாதி எனது அக்கா என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தை நான் படித்துப்பார்த்துதான் கையெழுத்துப்போட்டேனா என்றால் ஆமாம். நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் வாதிகள் எனக்கு உறவினர்கள் என்று நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் தாவா சொத்தைபற்றிய விவரங்கள் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான். நான் வெள்ளானூர் கிராமத்தில் தான் குடியிருக்கிறேன் என்பதை காட்டுவதற்கு எந்தவொரு ஆதாரமும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் ஆதார் அட்டை தாக்கல் செய்துள்ளேன்.

2. 2ம் வாதி தாவா சொத்து நிலத்தை 1ம் வாதிக்கு கிரைய பத்திரம் எழுதி கொடுத்தார் என்றால் சரிதான். எனவே 2ம் வாதிக்கு தான் தாவா சொத்தில் உரிமை உள்ளது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை வழக்கறிஞர் ஆணையர் வந்து அளந்து பார்த்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்தை வழக்கறிஞர் ஆணையர் மற்றும் சர்வேயர் அளந்து பார்த்தபின்பு தாவா சொத்து என்னுடையது கிடையாது என்று அறிக்கை ஒன்றை

தாக்கல் செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். வழக்கின் விவரங்கள் தெரியாமல் 1ம் வாதிக்கு சாதகமாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

(மறுவிசாரணை இல்லை.)